2022 ஏப்ரல் 11]

திருமதி வானதி சீனிவாசன்: *அதை எடுத்து மிகப் பெரிய பூங்காவாக* develop *பண்ணலாம். (குறுக்கீடு)*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருக்கு உட்பட்டது. எனவே, அதனை தனிக் கேள்வியாகக் கேளுங்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை அதனை* develop *செய்ய வேண்டும். மாண்புமிகு நகராட்சி நிர்கவாகத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் இந்த நேரத்தில் இதனை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எந்தத் துறைக்குட்பட்டதோ அவர்கள்தான் அந்தப் பணியை மேற்கொள்வார்கள். மாநகராட்சி பகுதிக்குட்பட்டது; நீங்கள் தனி கேள்வி கேளுங்கள், வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம். (குறுக்கீடு)*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு அங்கே பூங்கா தேவை என்பதை இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

90—

மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம்

***3058—திரு. ச. அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் இயங்கி வரும் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை தெற்கு, சோழிங்கநல்லூர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட இடம் ஒதுக்கிடக் கோரி சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரிடம், சோழிங்கநல்லூர் மண்டல உதவி ஆணையாளர் அவர்களால் அனுமதி கோரப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெறப்பட்டவுடன், மண்டல அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட துறையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினுடைய உதவி ஆணையாளர் அலுவலகம் 1–3–2009 அன்று முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், அன்றைய அமைச்சர் அண்ணன் திரு. எ.வ. வேலு, அன்றைய அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா ஆகியோருடைய பெரு முயற்சியால் தாம்பரம் தொகுதியிலிருந்து பிரிக்கப்பட்ட சோழிங்கநல்லூர் தொகுதிக்காக கொண்டு வரப்பட்டது. ஆனால், அந்த அலுவலகம் இதுவரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அந்த அலுவலகம் பிரதான சாலையிலிருந்து வெகு தூரமாக இருப்பதால், பொது மக்கள் நடந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது. மேலும், இங்கே இருக்கின்ற அலுவலகத்திற்குப் போதிய இடவசதி இல்லாத ஒரு சூழல் உள்ளது. பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். இந்த அலுவலகத்தின்கீழ் 1,93,505 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். நாள் ஒன்றுக்கு சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் அவரவர்களுடைய பயன்பாட்டிற்கு வந்து செல்கின்றார்கள். ஆகவே, பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வாடகைக் கட்டடத்தில் இயங்கி

2022 ஏப்ரல் 11]

வரும் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமானது. ஏற்கெனவே எங்களுடைய உதவி ஆணையாளர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகியபோது, வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு சுமார் 30 செண்ட் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், உதவி ஆணையாளர் அலுவலகம் கட்டுவதற்கு இடம் கொடுப்பதற்கு சம்மதித்துள்ளார். உடனடியாக துறையின் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மூலமாக 130 பொது விநியோகக் கடைகள் இயங்கி வருகின்றன. அதில் 29 கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அந்தக் கடைகள் அனைத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், 1,000 முதல் 2,000 வரையுள்ள குடும்ப அட்டைதாரர்கள் கொண்ட 84 கடைகள் உள்ளதாகவும், 2,000 முதல் 3,000 வரையுள்ள குடும்ப அட்டைதாரர்கள் கொண்ட 18 கடைகள் உள்ளதாகவும், 3,000 முதல் 4,000 வரையுள்ள குடும்ப அட்டைதாரர்கள் கொண்ட 3 கடைகள் உள்ளதாகவும் தெரிகிறது. ஆக, பொது மக்கள் இந்த நிலையில் இருக்கிறார்கள். மேலும் 199—வது வட்டத்திற்குட்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அந்தப் பகுதியில்

இன்றைக்கு 1,942 அட்டைதாரர்கள் கொண்ட கடையை இரண்டாகப் பிரிப்பதற்கு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டப்பட்டு இன்றுவரை அந்தக் கடையைப் பிரித்து வழங்காத ஒரு சூழல் இருக்கின்றது. அதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். ஆகவே, உடனடியாக பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு அதிகமான குடும்ப அட்டைகள் உள்ள கடைகளையெல்லாம் பிரித்து வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதியில் 53 நியாய விலைக் கடைகள் 1,000 முதல் 1,500 குடும்ப அட்டைகளுடனும், 28 நியாய விலைக் கடைகள் 1,500 முதல் 2,000 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன. 2,000 குடும்ப அட்டைகளுக்குமேல் 23 நியாய விலைக் கடைகள் செயல்பாட்டில் உள்ளன. சோழிங்கநல்லூர் மண்டலத்தில் ஆயிரம் குடும்ப அட்டைகளுக்குமேல் 104 நியாய விலைக் கடைகள் உள்ளன. அவற்றில் அட்டைதாரர்கள் கடைக்குச் சென்று பொருட்களைப் பெறுகின்ற வசதிக்கேற்ப அருகிலேயே நியாய விலைக் கடைகள் அமையும்வண்ணம் முழு நேரக் கடைகளாகவும், பகுதி நேரக் கடைகளாகவும் விரைவில் பிரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கடையைப் பிரிப்பதற்கு ஏற்கெனவே துறையின் மூலமாக கோரிக்கை வைத்திருக்கின்றார். அதனையும் விரைவில் பிரித்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது சோழிங்கநல்லூர் மண்டல உதவி ஆணையாளர் கட்டுப்பாட்டில் 130 நியாய விலைக் கடைகள் செயல்பாட்டில் உள்ளன. அவற்றில், 101 நியாய விலைக் கடைகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 29 நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றில் கூட்டுறவுத் துறையால் நடத்தப்படும் 120 நியாய விலைக் கடைகளில், 94 நியாய விலைக் கடைகள் சொந்தக் கட்டடங்களிலும், 26 நியாய விலைக் கடைகள், வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.*

2022 ஏப்ரல் 11]

முற்பகல் 10–40

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்திவரும் 9 நியாய விலைக் கடைகளில், 7 கடைகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 2 கடைகள் மட்டும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. சுய உதவிக் குழுக்கள் மூலமாக நடத்தப்படும் ஒரு நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. இவ்வாறு வாடகைக் கட்டடங்களில் செயல்படும் நியாய விலைக் கடைகளுக்கு குடும்ப அட்டைதாரர்கள் வந்து செல்லும் வசதி, கடைகளுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் உரிய முறையில் நகர்வு செய்து நன்முறையில் சேமித்து வைக்கும் வசதி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அரசு நிலங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிலங்களைத் தேர்வு செய்து, நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் உரிய கட்டமைப்பு வசதிகளுடன் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரைக்கும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைய பதில் சொல்லிவிட்டீர்களே!*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரையில் இடங்கள் கிடைத்து விடுகின்றன. ஆனால், நகர்ப் பகுதிகளில், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் இடம் கிடைப்பதிலே சிரமம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே எங்கெங்கெல்லாம் அரசு இடம் இருக்கிறதோ, அவற்றையெல்லாம் தேர்வு செய்து கொடுத்தால், நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி, சோழிங்கநல்லூர் தொகுதி. தமிழ்நாட்டிலேயே தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அதிகமாக இருக்கின்ற தொகுதி, சோழிங்கநல்லூர் தொகுதிதான். சோழிங்கநல்லூர் தொகுதியில் CSR fund *நிறைய இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

அந்த நிறுவனங்களை அணுகி நிதியைப் பெற்றுத் தந்தால், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 29 நியாய விலைக் கடைகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகளை துறை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் தொகுதி சுமார் 6 இலட்சம் மக்கள் தொகை உள்ள தொகுதி. 60–க்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. ஒரு மண்டல உதவி ஆணையர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு புறத்தில், தாம்பரத்திற்கு 5 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். மற்றொரு புறம் ஆலந்தூருக்கும் 5 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். ஏற்கெனவே கடந்த சட்டமன்ற கூட்டத்தில் நான் பேசுகின்றபொழுது, பலமுறை இதைப்பற்றி குறிப்பிட்டுப் பேசியிருக்கின்றேன். ஆகவே, பல்லாவரத்தில் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை என்னிடத்தில் பலமுறை வலியுறுத்தியிருக்கிறார்கள். துறையின் மூலமாக கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உதவி ஆணையர் அலுவலகம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*